

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கடந்த 05.03.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நாடாளுமன்ற தொகுதிகளின் மறுசீரமைப்பு குறித்து நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் மேற்கொண்ட முடிவின்படி, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி ஆகியோர் நேற்று முன்தினம் (19.03.2025) புதுதில்லியில் பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களை சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கடிதத்தை ஒப்படைத்து, வருகின்ற மார்ச் 22 ஆம் தேதி சென்னையில் நடைபெறவுள்ள ”நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை தொடர்பாக அமைக்கப்பட்ட கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர். இந்நிகழ்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கனிமொழி என்.வி.என். சோமு, எம்.எம். அப்துல்லா ஆகியோர் உடனிருந்தனர்.




புதுதில்லியில், நேற்று முன்தினம் (19.03.2025) ஒன்றிய பழங்குடியினர் நல அமைச்சர் ஜுவல் ஓரம் அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா சந்தித்து, ஈரோடு மாவட்டம், கடம்பூர் மலையிலுள்ள சத்தியமங்கலம் தாலுக்கா மற்றும் பர்கூர் மலையிலுள்ள பவானி தாலுக்கா ஆகிய பகுதிகளை பழங்குடியினர் பட்டியலில் வரிசை எண்.25இல் மலையாளி இனத்தின்கீழ் சேர்த்து நாடாளுமன்றத்தில் சட்டமியற்ற நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார். இச்சந்திப்பின்போது, எஸ். அண்ணாதுரை, ம. தொ.ப., மற்றும் ஈரோடு மாவட்ட மலையாளி இனத்தினைச் சார்ந்த பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## புதுக்கோட்டை மக்கள்தான் பயன்பெறப் போகிறார்கள்

# காவிரி - வைகை - குண்டாறு இணைப்பை பிரகடனப்படுத்தியவர் கலைஞர்!

## சட்டப்பேரவையில் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் விளக்க பதில்!

சென்னை, மார்ச் 21 -

சட்டப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் விஜய பாஸ்கர் பேசும்போது குறுக்கிட்டு பேசிய நீர் வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் காவிரி வைகை குண்டாறு இணைப்பை முதன் முதலில் பிரகடனப் படுத்தியவர் கலைஞர் அவர்கள் தான் என்று கூறினார்.

இது குறித்து நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் விளக்க பதில் வருமாறு:-

உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான அவர்கள், காவிரி-வைகை-குண்டாறு பற்றி சொன்னார்கள். இந்த காவிரி-வைகை-குண்டாறு இணைப்பை அமைக்க வேண்டுமென்று பிரகடனப்படுத்தியவரே கலைஞர் அவர்கள்தான். உடனடியாக அந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமென்பதற்காகத்தான் காவிரியின் குறுக்கே ஒரு check dam-ஐ 7 அடி உயரத்திற்கு கட்டினார்கள்.

ஐந்து அடி தண்ணீர் இருக்கிறது. அதற்கு பிறகு, எங்கள் ஆட்சி போய்விட்டது. அதற்கு பிறகு நீங்கள் பத்து ஆண்டு காலம் ஆட்சி புரிந்தீர்கள். அதைப் பற்றி திரும்பி பார்க்கவில்லை. சென்ற முறை எடப்பாடியார் முதலமைச்சராக இருந்த காலத்தில், அந்தத் திட்டத்தை எடுத்தீர்கள். இந்த மன்றத்திலே இருப்பவர்களி டத்திலே கேட்கிறேன்.

இந்தப் பகுதியிலிருந்து ஒரு கால்வாய் வெட்ட வேண்டுமென்றால், இங்குதான் முதல் கால்வாய் வெட்டுவோம், அதற்கடுத்து அடுத்த கால்வாய் வெட்டுவோம்,



அப்படிதானே வெட்டுவோம். ஆனால், இவர்கள் அப்படி வெட்டவில்லை. இங்கு ஒரு கால்வாய் இதைத் தாண்டி இரண்டு ஜில்லாக்கள் வருகின்றன. கரூர் ஜில்லா வருகிறது மற்றும் அவர்களுடைய ஜில்லா வருகிறது. இதுவரையிலும் இந்த மந்திரிக்கு இங்கு ஒரு கால்வாய் வெட்டியுள்ளார்கள். இடையில் ஒன்றுமே செய்யவில்லை. நான்கு மைல், ஐந்து மைல் தள்ளி சென்று, அங்கு ஒரு கால்வாய் வெட்டிக்கொண்டார்கள். இதுமாதிரி உலகத்தில் கால்வாய் வெட்டிய ஒரேயொரு பிரகஸ்பதி நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) கால்வாய் வெட்டினால் ஒரே நேரத்தில் வெட்டியிருக்க வேண்டும். One, two, three-ஏன் இடையில் விட்டீர்கள்? என் ஊரில் ஒரு கால்வாய் வெட்டு, அவருடைய ஊரில் ஒரு கால்வாய் வெட்டு என்ற ரீதியில்-இதுமாதிரியான ஒரு blunder-ஐ வேறு யாரும் செய்திருக்க முடியாது. (எடப்பாடி பழனிசாமி குறுக்கீடு)

முன்னாள் முதல்வர் அவர்கள் என்மீது பழி போடுகிறார். பிரச்சினையினால்தான் கேட்டேன். நான்கூட ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை கால்வாய் வெட்டினேன். ரீசைலத்திலிருந்து இங்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு. அதனோடு ஒட்டிக்கொண்டே போவதால்தான் அதற்குமேல் pipe வரும். இந்த மாதிரி, இங்கு மட்டும் கொஞ்சம் land acquisition, அங்கு land acquisition கிடைக்கும்பட்சத்தில் கால்வாய் வெட்ட முடியாது. கால்வாய் எப்படி வெட்டப்பட்டது குறித்து சொல்லவேண்டுமென்றால், ஒரு motive-உடன் வெட்டப்பட்டதே தவிர, வேறு அல்ல. அதில் ரொம்ப கெட்டிக்காரத்தனமாக முன்னாள் முதல்வர் அவர்கள் சுலபமாக இதை விட்டுவிட்டு, நேராக கருமேனி-நம்பியாறு குறித்து பேசுகின்றார். கருமேனி ஆற்றினைப் பற்றி என்னைவிட அவருக்கு தெரியும். இதுகுறித்தெல்லாம் demand-ல் நிறைய பேசிக்கொள்ளலாம்.

உறுப்பினர் சொன்னதைப்போல, தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவிக்கிறபோதே சொன்னார்கள். இந்த திட்டத்தால் காவிரி to குண்டாறு வரை சென்றாலும்கூட பெரும்பகுதி புதுக்கோட்டை மக்கள்தான் இதில் பயன்பெறப் போகிறார்கள். குடிப்பதற்குக்கூட இந்த தண்ணீர்தான் அவர்களுக்குத் தேவைப்படுகிறது என்று அன்றைக்கு கலைஞர் அவர்கள் பேசினார்கள். ஆகையினால், நாங்கள் அதை மறக்கவில்லை.

இவ்வாறு நீர் வளத் துறை அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

## அடையாறு ஆற்றை தூய்மைப்படுத்தும் பணி

# டெண்டர் விடப்பட்டு வேலை இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது!

## சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

சென்னை, மார்ச். 21-

சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் விஜயபாஸ்கர் பேசும் போது குறுக்கிட்டு அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில், அடையாறு ஆற்றை தூய்மைப்படுத்தும் பணி இந்த ஆண்டு டெண்டர் விடப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார்.

**அமைச்சர் கே.என். நேரு:** உறுப்பினர் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கும் 1,500 கோடி ரூபாய், 1,500 கோடி ரூபாய், 1,500 கோடி ரூபாய் என்று கேட்டார்கள். public participation உடன் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டு



மென்று அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டு tender விடப்பட்டபோது, அது எந்தெந்த இடங்களில் எல்லாம் பொதுமக்கள் குடியிருக்கிறார்கள். குடியிருக்கிற இடத்தை எடுக்கவேண்டும். அப்படி எடுக்கும்போது அவர்களுக்கு தேவையான வீடுகளை கட்டிக் கொடுத்துத்தான் அவர்களை அங்கேயிருந்து எடுக்கவேண்டும் என்ற சூழ்நிலை. பல இடங்களில் ஏற்கெனவே புதிதாக கட்டப்பட்ட வீடுகளுக்கு செல்கிறேன் என்று ஒப்புதல் தந்து, அப்படி தந்தவர்களை 4,500 மேற்பட்ட குடும்பங்களை, அங்கு குடியமர்த்திவிட்டு, மீதம் இருக்கிறவர்களுக்கு குடியிருக்க இடத்தை தேர்வு செய்ய வேண்டுமென்று, இடத்தை தேர்வு செய்து, அவர்களுக்கெல்லாம் எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் செய்யவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள், அவருடைய தலைமையில் 3 முறை கூட்டம் நடத்தி, முடிவு செய்தார்கள்.

எனவே, இப்போதுதான் அது take-off ஆகியிருக்கிறது. அதனால் முதல் வருடம் சொன்னதும் ஒன்றுதான், இப்போதும் சொன்னதும் ஒன்றுதான். இந்த அண்டு முழுமையாக tender எல்லாம் கையெழுத்திட்டு, வேலை இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. எனவே, அங்கு இருக்கிற பத்தாயிரம் குடும்பங்களை, நினைத்து பாருங்கள் சென்னையில் பத்தாயிரம் குடும்பங்கள், பாதிக்காத அளவிற்கு கொண்டு செல்லவேண்டிய அதற்கான நேரம். அதைத்தான் திரும்ப, திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஆர்.இளங்கோ, 545, 2 – ஆச்சின்லேக் தெரு, ஜி.கே. காலனி, சென்னை–82. (2) தி.நிர்மல், 28–பி, நேதாஜி நகர், 5–வது தெரு, வில்லிவாக்கம், சென்னை– 49. (3) ஜீ.பிரபாகரன், 2, வாஞ்சிநாதன் 4–வது தெரு, செம்பியம், சென்னை–11. (4) ம.சரண்ராஜ், 18/2, 2–வது தெரு, ஜி.கே.எம். காலனி, சென்னை–82. (5) மு.தாவுத் உசேன், 243/4, ஜி.கே.எம், காலனி, 15–வது தெரு, சென்னை–82. (6) தி.கணேஷ், 37/எஃப்–2, கந்தவேல் ஃபிளாட்ஸ், 35–வது ஆசாத் தெரு, ஜி.கே.எம். காலனி, சென்னை–82. (7) அ.கிளமெண்ட் சிரில், 75/30, 35–வது ஆசாத் தெரு, ஜி.கே.எம். காலனி, சென்னை– 82. (8) க.மோகன், 203, டாக்டர் அம்பேத்கர் நகர் 2–வது தெரு, கொளத்தூர், சென்னை–99.

### திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி

**அமைப்பாளர் :** ஜெ.மணிகண்டன், 25/11, சுப்ரமணிய ரோடு, பெரம்பூர், சென்னை – 11.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சீ.சஞ்சீவ்குமார், 141/84, நெல்வயல் ரோடு, பெரம்பூர், சென்னை–11 (2) அ.வினோத்ராஜ், 53, நேருஜி ஜோதி நகர், முதல் தெரு, அயனாவரம், சென்னை–23. (3) கோ.சரண்ராஜ், 27/14, வ.உ.சி. நகர், 2–வது தெரு, புளியந்தோப்பு, சென்னை–12. (4) சி.ஆனந்த், 43/40, குளக்கரைச் சாலை, ஓட்டேரி, சென்னை–12. (5) ஆ.அரவிந்த்ராஜ், 11, நரசிம்மா நகர், பிரதான சாலை, புளியந்தோப்பு, சென்னை–12. (6) இரா.மின்னல்ராஜ் (எ) மால்கம், 15, ஏகாங்கிபுரம் 2–வது தெரு, அயனாவரம், சென்னை–23. (7) எஸ்.சரத்குமார், 257, ஹெச்–பிளாக், பி.எஸ். மூர்த்தி நகர், டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலை, சென்னை–12. (8) அ.முகமது ரஃபி, 23/9, சின்னையா நியூ காலனி, 2–வது தெரு, பெரம்பூர், சென்னை–11.

### திரு.வி.க. நகர் தெற்குப் பகுதி

**அமைப்பாளர் :** பி.ஸ்ரீதர் ராஜன் 26/5, பொன்னியம்மன் கோயில் தெரு, புரசைவாக்கம், சென்னை–7.

**துணை அமைப்பாளர்கள் :** (1) தே.நாராயணன், 92/64, பராக்கா முதல் தெரு, நம்மாழ்வார்பேட்டை, சென்னை– 12 (2) ச.செல்வக்குமார், 8, 9–வது தெரு, கே.எம். கார்டன், பட்டாளம், சென்னை–12. (3) வா.பிரதாப், 317, எல்.பிளாக், சத்தியவாணி முத்து நகர், ஓட்டேரி, சென்னை– 12 (4) க.சரவணன், 24/19, குட்டப்பள்ளம், 2–வது தெரு, தாசாமகன், சென்னை–12. (5) ஒய்.வசிம் (எ) வசிமுல்லா, 47/12, 3–வது தெரு, தாசாமகன், சென்னை– 12. (6) எஸ்.ஆர்.மனோஜ் (எ) மனோஜ் சேகரன், 219, எஸ்.எஸ்.புரம் 7–வது தெரு, புரசைவாக்கம், சென்னை– 7. (7) ஐ.கே.ரவிராஜ், 165, எஸ்.எஸ்.புரம், ஏ–பிளாக், 2–வது தெரு, ஓட்டேரி, சென்னை–12.

### எழும்பூர் வடக்குப் பகுதி

**அமைப்பாளர் :** த.ஜெயக்குமார், 423, 15–வது பிளாக், பார்வதி கக்கன் காலனி, புளியந்தோப்பு, சென்னை–12

**துணை அமைப்பாளர்கள் :** (1) பா.பிரபாகரன், 65/1–ஏ, கந்தசாமி கோயில் தெரு, குயப்பேட்டை, சென்னை– 12. (2) என்.ஜெ.மதன்குமார், 263, 5–வது தெரு, புல்லாபுரம், கீழ்ப்பாக்கம், சென்னை–10. (3) ஆ.அஜீத்குமார் (எ) ஜெபா, 8/23, சிவராஜபுரம், 4–வது தெரு, புளியந்தோப்பு, சென்னை–12. (4) ஏ.ஆர்.யாசர் அராபத், 26/18, 2–வது தெரு, புளியந்தோப்பு, சென்னை – 12. (5) இ.பி.கார்த்திக், 11/6, ராகவன் தெரு, சூளை, சென்னை–112. (6) பி.டில்லி கணேஷ், 25, கனகராயத்தோட்டம், டிமலஸ் சாலை, புளியந்தோப்பு, சென்னை– 12.

### எழும்பூர் தெற்குப் பகுதி

**அமைப்பாளர் :** சே.பாலாஜி, 71/34, அருணாச்சலம் 4–வது சந்து, செனாய் நகர், சென்னை– 30.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ர.கார்த்திக், 29, வைத்தியநாதன் தெரு, செனாய் நகர், சென்னை–30. (2) பா.சங்கர், 11, வெங்கடாஜலபதி 2–வது தெரு, செனாய் நகர், சென்னை–30. (3) ஐ.சூர்யா, 10, ஸ்டிங்கல்ஸ் ரோடு, பெரியமேடு, சென்னை–3. (4) அ.அவினாஷ், 11/6, மங்களாபுரம், 40–வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை–31. (5) கோ.சந்தோஷ்குமார், 20/45, பெருமாள் தெரு, எழும்பூர், சென்னை–8. (6) மு.முகம்மது பிலால், 10–66, கியாலி தெரு, புதுப்பேட்டை, சென்னை –2. (7) லோ.சுகுமாறன், 51, நடேசன் நகர், சூளை, சென்னை–112. (8) ஜெ.சிலம்பரசன், 9/15, இராஜம்மாள் தெரு, சேத்துப்பட்டு, சென்னை–31.

### துறைமுகம் கிழக்குப் பகுதி

**அமைப்பாளர் :** பு.செந்தில்குமார், 9/15, சமயவரத்தம்மன் கோயில் தெரு, ஏழுகிணறு, சென்னை– 1.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.விஷ்ணுசக்ரவர்த்தி, 9/16, குமாரராஜா நகர், நாராயண சாரங்கத் தோட்டத் தெரு, கிளைவ் பேட்டரி, சென்னை–1. (2) அ.சுமன்ராஜ், 10, ஆசீர்வாதபுரம், 8–வது தெரு, பிராட்வே, சென்னை–108. (3) க.பாலாஜி, 1/3, அப்பாசாமி சந்து, ஏழுகிணறு, சென்னை–1. (4) த.பிலிப்ஸ், 96/74, திருவள்ளூர் நகர், பிராட்வே, சென்னை–108. (5) சி.இம்ரான்கான், 40/63, மண்ணடித் தெரு, மண்ணடி, சென்னை–1. (6) சீ.வினோத்குமார், 246, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ஏழுகிணறு, சென்னை–1. (7) வி.யஸ்வந்த், 2, போர்ச்சுகீசிய சர்ச் தெரு, ஏழுகிணறு, சென்னை–1.

### துறைமுகம் மேற்குப் பகுதி

**அமைப்பாளர் :** நா.மோகன், 32/20, ராமகிருஷ்ணா தெரு, சௌகார்பேட்டை, சென்னை–1.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஆ.திருப்பதி, 179, உட்வோர்ட் 2–வது தெரு, வால்டாக்ஸ் ரோடு, சென்னை–79. (2) அ.ஆனந்த், 11, பெருமாள் கோயில் தோட்டம், 3–வது சந்து, சௌகார்பேட்டை, சென்னை–1. (3) மா.சண்முகசுந்தரம், 314, டி.பிளாக் 2–வது தெரு, காந்தி நகர், பல்லவன் சாலை, சென்னை–9. (4) ப.அஜீத்குமார், 32/28, முனியப்பன் தெரு, கொண்டித்தோப்பு, சென்னை–1. (5) கே.ஆர்.மணிரத்தினம், 60, 1–வது தெரு, யானை கவுனி, கல்யாணபுரம், சென்னை–1. (6) மு.கண்ணியப்பன், 19/1, பிள்ளையார் கோயில் தெரு, பூங்கா நகர், சென்னை–3.

### அம்பத்தூர் வடக்குப் பகுதி

**அமைப்பாளர் :** இரவை.பிரபு, 14, சாப் தெரு, வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை– 53.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கே.வி.சதீஸ், 72, எஸ்–3, கே.பி.ஹோம்ஸ், வெங்கடாபுரம், கே.கே. ரோடு, அம்பத்தூர், சென்னை–53. (2) சு.இளங்கோவன், 5/76, புதூர் பிரதான சாலை, அம்பத்தூர், சென்னை–53. (3) அ.முத்துகுமரன், 47/20, பெருமாள் கோயில் தெரு, புதூர், அம்பத்தூர், சென்னை–53. (4) சு.பிரசாந்த்குமார், 15, நல்லகிணறு தெரு, மங்களபுரம், அம்பத்தூர், சென்னை–53. (5) ச.ஜெகதீஸ், 11, மீனாம்பாள் சிவராஜ் தெரு, எஸ்.வி.நகர், ஒரகடம், அம்பத்தூர், சென்னை–53. (6) ர.சந்தானகிருஷ்ணன், 8, பஜார் ரோடு, ஐ.சி.எஃப். காலனி, அத்திப்பட்டு, அம்பத்தூர், சென்னை–58. (7) ர.பாலாஜி, 53/20, டாக்டர் அம்பேத்கர் தெரு, ஆசிரியர் காலனி, அம்பத்தூர், சென்னை–53. (8) ச.ஷேக் அப்துல்லா, 5, 31–வது நிழல் சாலை, பானு நகர், அம்பத்தூர், சென்னை– 53.

### அம்பத்தூர் தெற்குப் பகுதி

**அமைப்பாளர் :** (1) என்.பி.எம்.வசந்த், 24/12, வெஸ்டன் அப்பார்ட்மெண்ட், 17–வது தெரு, வெல்கம் காலனி, அண்ணா நகர் மேற்கு, விரிவாக்கம், சென்னை – 101.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.மணிகண்டன், 13/6, 5–வது தெரு, வடக்கு மாட வீதி, பாடி, சென்னை–107. (2) ச.சௌந்தராஜன் (எ) ராஜா, 14, வண்டியம்மன் கோயில் தெரு, பாடிக்குப்பம், சென்னை – 107. (3) எஸ்.கே.கோவிந்தன், 47/4, 8–வது தெரு, பாடி புதுநகர், சென்னை–101. (4) இ.சாந்தகுமார், 1, படவேட்டம்மன் கோயில் தெரு, பாடி, சென்னை – 50. (5) எம்.பி.சந்தோஷ், 126, பஜனை கோயில் தெரு, பாடி, சென்னை – 50. (6) செ.சந்திரசேகர், 6/12, ரவுண்ட் பில்டிங், அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை–101. (7) பா.உதயகுமார், 13/8, 6–வது தெரு, பாடி புது நகர், அண்ணா நகர், மேற்கு விரிவாக்கம், சென்னை–103.

### அம்பத்தூர் கிழக்குப் பகுதி

**அமைப்பாளர் :** ஜெ.பி.ஆர்.ரகு, 6/21, பஜனை கோயில் தெரு, பட்டரவாக்கம், அம்பத்தூர் தொழில்பேட்டை. சென்னை–58.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.கலாநிதி, 4/11, பெரியார் தெரு, செங்குட்டுவன் நகர், மேணாம்பேடு, அம்பத்தூர், சென்னை– 53. (2) கு.கார்த்திக், 10, சாந்தி நகர், கொரட்டூர், சென்னை – 80. (3) தே.லோகுபிரகாஷ், 180, பிரிணில், பூர்ணா அப்பாட்மெண்ட், 7–வது தெரு, கிழக்கு பாலாஜி நகர், கள்ளிக்குப்பம், சென்னை–53. (4) லோ.திருநாவுக்கரசு, 20, சிவலிங்கபுரம், அக்ரஹாரம், கொரட்டூர், சென்னை–76. (5) மு.சூர்யா, 10/173, 6–வது தெரு, கலெக்டர் நகர், மாதானாங்குப்பம், சென்னை–99. (6) சீ.லோ.சரண்ராஜ், 7/38, எல்லையம்மன் நகர் முதல் பிரதான சாலை, 2–வது குறுக்குத் தெரு, கொரட்டூர், சென்னை–76.

### வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி

**அமைப்பாளர் :** ம.ஜெகதீஸ்வரன், 98/168, லாக் தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை–10.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.எம்.பாரதி (எ) நரேந்தர், 14/87, பாளையம் பிள்ளை நகர், அயனாவரம், சென்னை–23. (2) டோ.பால் ஸ்டீபன், 105–பி, லாக்மா நகர், கீழ்ப்பாக்கம், சென்னை–10. (3) ம.முனுசாமி, 3/2, புதுத் தெரு, அயனாவரம், சென்னை –23 (4) சே.ராஜா, 26–ஏ, சோலையம்மன் கோயில் தெரு, அயனாவரம், சென்னை–23. (5) ஆர்.சீனிவாசன், 8–ஏ, கே.கே.நகர், முதல் தெரு, அயனாவரம், சென்னை–23. (6) ப.கார்த்திக், 27/28, திருப்பேச்சீஸ்வரர் தெரு, அயனாவரம், சென்னை– 23. (7) எம்.சிவராஜ், 14/2/8, சி.கே.தெரு, அயனாவரம், சென்னை– 23.

### வில்லிவாக்கம் மேற்குப் பகுதி

**அமைப்பாளர் :** வெ.மகேந்திரன், 69–சி, பாரதி நகர், கிழக்கு ஏரிக்கரை, வில்லிவாக்கம், சென்னை–49.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.மணிகண்டன், 252, வ.உ.சி. தெரு, டி.வி. நகர், திருமங்கலம், சென்னை– 40. (2) டி.கே.நல்லரசு, 27/7, தான்தான்றி அம்மன் கோயில் தெரு, வில்லிவாக்கம், சென்னை–49. (3) சு.கமலகண்ணன், 24, காமராஜர் நகர், அம்மன்குட்டை, வில்லிவாக்கம், சென்னை– 49. (4) செ.மோகன்ராஜ், 4/124, ஏ –டைப், சிட்கோ நகர், சென்னை – 49. (5) க.சிலம்பரசன், 12, பெரியார் தெரு, பழைய திருமங்கலம், அண்ணாநகர் மேற்கு, சென்னை– 40. (6) தே.ஆகாஷ் (எ) ஹரிஹரசுதன், 6/40, 85–வது தெரு, சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை– 49.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 19–03–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி